தேதி.16.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.5/2015 திரு.பழனிச்சாமி, த/பெ.ராமசாமி வா.சா.2

<u>வா.சா.2 : சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வாதி ராமசாமி எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய தாய்மாமன் ஆவார். நான் பிறந்து வளர்ந்தது அவிநாசி, சேவூர் ஆகும். நான் தற்போது ஊட்டியில் விவசாயம் செய்து வருகிறேன். 1998லிருந்து 2005 வரை நான் கேர்மாளத்தில் விவசாயம் செய்து வந்தேன். கேர்மாளத்தில் எனக்கு சொந்த பூமி உள்ளதா என்றால் இல்லை. குத்தகைக்கு ஒட்டிவந்தேன். ஜெய்சிங் என்பவரின் பூமியை ஓட்டிவந்தேன். அதன் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. நான் எப்போது அவ்வாறு கேர்மாளத்தில் விவசாயம் செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒப்பந்தம் போட்டப்பட்டதாக சொல்லும் நிலையில் தாவா சொத்தின் விஸ்தீர்ணம், சர்வே எண் தெரியுமா என்றால் அதன் விஸ்தீர்ணம் 11 ஏக்கர், சர்வே எண், செக்குபந்தி தெரியாது. சுரேஷ் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் மண்டி உரிமையாளர் மூலம் தெரியும். எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 1998லிருந்து பழக்கம். சாரதாம்மாள் என்பவரை தெரியுமா என்றால் 1998ல் நான் கேர்மாளம் சென்ற பின்பு தான் அவரைத்தெரியும். சுரேஷ் மற்றும் சாரதாம்மாள் எந்த தேதியில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் தேதி தெரியாது. எங்கு வைத்து ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் சாரதாம்மாளின் வீட்டில் வைத்து ஒப்பந்தம் செய்யப்பட்டது.

மேற்படி ஒப்பந்தம் செய்யப்பட்ட போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் நான் சாரதாம்மாளின் வீட்டில் வைத்து ஒப்பந்தம் செய்யப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சுரேஷ் சொல்லி தான் தெரியும். எந்த தேதியில் அவ்வாறு என்னிடம் சுரேஷ் சொன்னார் என்றால் ஒப்பந்தம்போட்டு இரண்டு மூன்று நாட்கள் கழித்து சொன்னார். எனவே ஒப்பந்தம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அதன் பின்னர் சாரதாம்மாளும், ராமசாமியும் ஒப்பந்தம் போட்டதாக கூறியுள்ளேன் என்றும், எந்த தேதியில் ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் 2000ம் வருடத்தில் 2ம் மாதம் போடப்பட்டது. தேதி தெரியாது. சாரதாம்மாளும், ராமசாமியும் ஒப்பந்தம் போட்ட போது சுரேஷ் அங்கு இருந்தாரா என்றால் இல்லை. வேறு யார் இருந்தார்கள் என்றால் வழக்கறிஞர் கிரி கவுடர், நான், சாரதாம்மாள், வழக்கறிஞருடன் சிவக்குமார் என்பவர் வந்திருநத்தார். வழக்கறிஞர் கிரி கவுடரை எனக்கு எத்தனை வருடங்களாகத் தெரியும் என்றால் ஒப்பந்தம் போட்ட பின்னர் தான் தெரியும். நான் சொல்வது போது 2000ம் வருடத்தில் 2ம் மாதத்தில் சாரதாம்மாளும், ராமசாமியும் ஒப்பந்தம் போட்டதாக சொல்வது பொய் என்றும், அதனால் நான் முதல் விசாரணையில் 2015ல் ஒப்பந்தம் போட்டதாக முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வாதியும், 1ம் பிரதிவாதியும் ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதி எனக்கு தாய்மாமன் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.